செய்தி வெளியீடு எண்: 907 நாள்: 12.12.2018

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (12.12.2018) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 484 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட 3 சாலைகள், புதிதாக கட்டப்பட்டுள்ள 2 ஆற்றுப்பாலங்கள் மற்றும் இரயில்வே கடவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட நெடுஞ்சாலைத் துறைக்கான 164 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 222 உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் தூத்துக்குடி மாவட்டம், நடுவப்பட்டி, கோவில்பட்டி, திட்டங்குளம் மற்றும் எட்டையாபுரம் நகரில் போக்குவரத்து நெருக்கடியை தீர்க்கும் வகையில் 167 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட 31.65 கிலோ மீட்டர் நீள பருவக்குடி – கோவில்பட்டி – எட்டையாபுரம் – விளாத்திக்குளம் – வேம்பார் சாலைப் பகுதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மேலும், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி – பரதர் உவரி கிழக்கு கடற்கரை சாலை சந்திப்பு வரை 154 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட 35.20 கிலோ மீட்டர் நீள சாலைப்பகுதி; சீதைக்குறிச்சி – வாள்வீச்சு ரஸ்தா சாலையில் 4 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்;

விழுப்புரம் மாவட்டம், கடலூர் –சித்தூர் சாலையில் 117 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 28.45 கிலோ மீட்டர் நீள மேம்படுத்தப்பட்ட சாலைப்பகுதி; விழுப்புரம் மற்றும் வெங்கடேசபுரம் இரயில்வே நிலையங்களுக்கு இடையில் 34 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே கடவுக்கு பதிலாக கட்டப்பட்ட சாலை மேம்பாலம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சென்னை – திருச்சிராப்பள்ளி – திண்டுக்கல் சாலையில் கோரையார் ஆற்றின் குறுக்கே 5 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலம்;

என மொத்தம், 484 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 மேம்படுத்தப்பட்ட சாலைகள், 2 ஆற்றுப்பாலங்கள் மற்றும் 1 சாலை மேம்பாலம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு .எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம், நெடுஞ்சாலைத் துறைக்காக தமிழ்நாடு பொறியியல் பணி தொகுதியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 164 உதவிப் பொறியாளர்கள் மற்றும் தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதியின் கீழ் (தொகுதி II அ) தெரிவு செய்யப்பட்ட 222 உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 4 உதவி பொறியாளர்கள் மற்றும் 3 உதவியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயலாக்கப்படும் சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டத்தினை செயல்படுத்திடவும், கண்காணித்திடவும், கள ஆய்வுகளை மேற்கொள்ளவும், முதற்கட்டமாக 1 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 26 வாகனங்களை திட்ட செயலாக்க அதிகாரிகளுக்கு வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 5 அதிகாரிகளுக்கு வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்கள்.

சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டம் குறித்த விவரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், துறை அதிகாரிகள் திட்ட செயலாக்கத்தினை கண்காணிக்க ஏதுவாகவும், சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டத்திற்கான http://www.ckicp.tnhighways.gov.in என்ற வலைதளத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டத்தின் திட்ட இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) டாக்டர் அருண் தம்புராஜ், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் திரு.ஆர். கோதண்டராமன், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) திருமதி. என். சாந்தி, தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) திரு. எம். கே. செல்வன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 12.12.2018**